"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஆண்டு சித்திரைமீ 27-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 16-ம் இல.

**தேவ அழைத்தல் ஞாயிறு**
**28 - 4 - 68**
இது சம்பந்தமாக யாழ்-மேற்றிராணியாரின் வேண்டுகோளை அடுத்தபக்கத்தில் காணவும்.

# பழையகால ஆடம்பரங்கள் அகற்றப்பட்டன

பழையகாலங்களில் பாப்பரசர் ஒரு பெரிய தேச அரசனுக்குரிய ஆடம்பரங்களுடன் வாழ்ந்துவந்தார். அவரது இல்லத்தில் தொண்டுசெய்யத் தகுந்தவர்களெனப் பிரபுவர்க்கத்தினர் தெரிவு செய்யப்பட்டுப் பரம்பரை பரம்பரையாக அத்தொண்டுகளை ஆற்றிவந்தனர். ஆனால் படிப்படியாக இத்தகைய ஆடம்பரங்கள் கைநெகிழப்பட்டுவந்தன. இருவாரங்களுக்குமுதல் 6-வது சின்னப்பபாப்பரசர் வத்திக்கானில் இன்னும் தப்பி இருந்தவற்றுக்கும் முற்றுப்புள்ளியிட்டுவிட்டார். தமது இல்லத்தில் பிரபுவர்க்கத்தினருக்குரிய பலபதவிகளை அகற்றிவிட்டார். ஆன்மகருமங்களுக்கெனப் பதவிகளும் வேலைகளும் வத்திக்கானில் இருப்பதல்லாது அரச ஆடம்பரங்களுக்கென இனிமேல் எவற்றையும் காணமுடியாது. எளிமையும் தூய்மையுமே அங்கு காணத்தக்க குணங்களாக இருக்கவேண்டுமென்பது பாப்பரசரது விருப்பம்.

## இனவெறியைத் தடுக்க ஒருயோசனை

அமெரிக்கதேச கலிபோனியாப் பிரிவில் எபிஸ்கோபல்சபை மேற்றிராணியார் கில்மாமயர்ஸ் அடிகளார் உலகில் வலுப்பெற்றுவருகிற இனவெறியை அகற்ற உலககிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் யாவரும் மிக விரைவில் ரோமாபுரியில் பாப்பரசரின் தலைமையில் ஒன்றுகூடி ஒருமுடிவுக்கு வரவேண்டுமென்று சென்றவாரம் ஒருயோசனைகூறி இருக்கின்றார். "இன்றைய உலகில் முதலாளிவர்க்கத்தினருக்கும் தொழிலாளிகளுக்குமிடையில் இருந்துவந்த விரோதம் முன்னிருந்த வலிமையை இழந்துவிட்டது. இன்று கறுத்தவர், வெள்ளையர் என்றபிரிவே உலகத்தை அஞ்சவைக்கின்றது. இதற்குப் பரிகாரம் உடனடியாகக் காணுவிடில் பெரும் ஆபத்துவிளையும். ஆகவே இவ்வருடம் லண்டன்மாநகரில் கூடவிருக்கும் ஆங்கில திருச்சபை மேற்றிராணிமார் கூட்டத்தையும், சுவீடனில் கூடஇருக்கும் உலககிறிஸ்தவசபையின் மகாநாட்டையும் ஒத்திவைக்க வேண்டியிருப்பினும், அப்படியாவதுசெய்து, ரோமாபுரியில் ஒன்றுகூடி இனவெறியைத் தீர்த்துவைக்க முன்வருக" என்கிறார் அடிகளார்.

## ஒருபொய் அம்பலப்படுத்தப்பட்டது

அண்மையில் பொலொக்ஞே பிரதேச அதிமேற்றிராணியார் பதவியிலிருந்து நீங்கவிடைபெற்றுக்கொண்ட கருதினல் லெர்காரோ அவர்கள் ஒருமுற்போக்குவாதி. அவர் மிகமுற்போக்குவாதியாய் இருந்ததினலேயே அவரது விண்ணப்பம் பாப்பரசரால் அதிவிரைவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்னும் வதந்தி உலாவிற்று. இதை உண்மையற்ற வதந்திஎன்று காட்டுவதற்காக ஓய்வுபெறும் கருதினலவர்களை அந்தரங்கபேட்டியில்கண்டு உரையாடியதன்பின் பரிசுத்ததந்தை அக்கருதினலது சேவையின் சிறப்பையும் அவரது கொள்கைகளின் மேம்பாட்டையும் புகழ்ந்துகூறி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். இவ்வாறு கருதினல்மார் பதவிகளிலிருந்து நீங்குப்பொழுதெல்லாம் அறிக்கைகளைப் பாப்பரசர் விடுப்பதில்லை.

## கொமியூனிஸ்த நாடுகளில் ஜனநாயக தாகம்

செக்கோசிலவாக்கிய, போலாந்து முதலிய கிழக்கு ஐரோப்பிய கொமியூனிஸ்த நாடுகள் பலவற்றில் இத்தனைவருடகாலமாகச் சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுவந்திருந்தபோதிலும் அத்தேச மக்களிடையே ஜனநாயக ஆட்சிக்குள்ள தாகம் அழிந்துவிடவில்லை. பலதேசங்களிலும் அண்மையில் இத்தாகம் வெளிக்காட்டியிருக்கின்றது. ருஷிய தேசத்திலேதன்னும் முன்னிலும் கூடியமுறையில் சனங்கள் ஜனநாயகத்தை விரும்புவதால் அத்தேச அரசாங்கம் மக்களுடன் மீளவும் கடினமாக நடந்துகொள்ள முடிவு செய்திருக்கின்றது. உண்மையான ஜனநாயகமாயின் மக்களிடையே கொந்தளிப்புத் தோன்றப்படாதென போலாந்துப் பிரதமர் எச்சரித்திருக்கிறார்.

## ஜோர்தானில் அகதிகளின் நிலை மோசமாகின்றது

சென்றவருடம் ஜோர்தானுக்கும் இஸ்றயேலுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தின்பயனாக ஜோர்தானில் அகதிகளின் நிலை சகிக்கமுடியாததன்மையில் இருந்துவருகின்றது என்றும், இவ்வருடம் மேலும் இடையிடையே நடந்துவரும் தாக்குதலினால் இந்த உபத்திரவம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது என்றும் பாப்பரசருக்கு ஐக்கியதேச நாடுகளின் ஸ்தாபனத்தினால் நிறுவிய பலஸ்தீன அகதிநிலை நிவாரண குழுத்தலைவர் அண்மையில் எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

# தொழிலாளர் தினம்




மேதினம்! உரிமை குன்றிய சமுதாயம் உரிமைக்குரல்எழுப்பிய உயர் தினம்! உழைப்பின் மகத்துவத்தை உலகம் உணர்ந்து சீரான நீதிமுறைகளைக் கைக்கொண்ட சிறந்ததினம்! கடின உழைப்பின் தினம். தொழிலாளர் தினம். அதுமட்டுமா,, ஏழைத் தொழிலாளியான அர்ச். சூசைமாமுனிவன் புகழ்தினம்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## பரி. தந்தையின் சகோதரன் செனற்றராக இருக்க விரும்பவில்லை

ஆறுவது சின்னப்ப பாப்பரசருக்கு ஒரு மூத்தசகோதரன் இருக்கிறார். அவர் இப்போது இத்தாலிதேச அரசாங்க உயர் சபையில் செனற்றராக இருக்கிறார். இவ்வாறு அவர் செனற்றர் பதவியை அடைந்தது தமது இளைய சகோதரன் பாப்பரசர் பதவிக்கு உயர்த்தப்படுவதற்கு மூன்றுமாசங்களுக்கு முன்பே. இவ்வருடம் மீளவும் செனற்றர் பதவிக்குப் போட்டிகள் இத்தாலியில் தொடங்கிவிட்டன. ஆனால் செனற்றர் மொன்டினி அப்பதவியை மீளவும் விரும்பவில்லை. காரணம் ஏதெனில், போட்டியினால் ஏற்படும் அரசியல் வாதங்களில் தமது தம்பியாராகிய 6-வது சின்னப்ப பாப்பரசரின் கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய முறையில் எதிரிகள் சில சமயம் நடந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படாதென்பதே,

## எனது பிரேத அடக்கத்தில் புகழ்ப் பிரசங்கம் வேண்டாம்

சென்றவாரம் லண்டன்மாநகரில் கருதினல் ஹீனன் அப்பகுதிக்குருவானவர் ஒருவரின் மரண அடக்கத்தின்போது இவ்விண்ணப்பத்தை விடுத்துள்ளார். மரண அடக்கத்தில் செய்யும் புகழ்ப் பிரசங்கங்கள் இறந்தவர் ஓர் அர்ச்சியசிஷ்டவர் என்ற ஒரு தப்பபிப்பிராயத்தைப் பிரசங்கத்தைக் கேட்டவர்மனதில் உண்டுபண்ணி, மரணித்தவருக்காக மன்றாடிக்கொள்ளும் கடமையை மறக்கச் செய்கின்றதே அதற்குக்காரணமென எடுத்துக்கூறினார் கருதினல் அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### சித்திரை

28 ஞா. ப்ாஸ்கா விழாவுக்குப்பின் 2ஆம் ஞாயிறு [வெ]
29 தி. அர்ச். இராயப்பர் [சி]
30 செ. சியென்னு. அ.கத்தறின். [வெ]

### வைகாசி

1 பு. தொழிலாளரின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் [வெ]
2 வி. அர்ச். அத்தனுசியார் [வெ]
3 வெ. கிழமைப்பூசை
4 ச. அர்ச். மொனிக்கம்மாள் [வெ]


சத்தியவேத
பாதுகாவலன்

1968-ம்ஞூ சித்திரைமீ 27-ங்வ


# தேவ அழைத்தல்

எந்தச்சமூகமும் தனது தேவைகளை உணர்ந்து அவற்றைப் பூர்த்திசெய்வது அதன்கடமையாகும். இக்கடமையைச் செயல்முறையில் நிறைவேற்றும் பொறுப்பு ஒருசிலரையே சார்ந்திருப்பினும், சமூகத்தின் சகல அங்கத்தவரும் அத்தேவைகளை உணர்ந்திருப்பதோடு அவற்றைப் பூர்த்திசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளவரோடு ஒத்துழைத்து அவர்களுக்கு உதவக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது அனைவரின் கடமையுமாகும்.

கிறிஸ்துநாதரின் மறையுடலாகிய திருச்சபை என்னும் சமூகத்திற்கும் இக்கூற்று பொருத்தமாகும். திருச்சபைக்குத் தொண்டு செய்வதற்குக் குருமாரும், துறவிகளும் என்றும் தேவைப்படுகின்றனர். இத்தேவையைப் பூர்த்தி செய்வதில் ஊக்கம் எடுப்பது தேவ அழைத்தலுள்ள ஒரு சிலரது கடமைமட்டுமல்ல சகல கிறிஸ்தவரது கடமையுமாகும். தமது மேற்றிராசனத்திலும், தமது நாட்டிலும், ஏன் உலகின் ஏனைய பாகங்களிற்கூட தேவ அழைத்தலைப்பேணி வளர்க்கும் கடமை அனைவருக்கும் உண்டு.

ஆனால் தேவனது பணியில் ஈடுபட யாரும் விரும்பும்போது அதற்கு ஒத்துழைப்பு நல்குவதற்குப்பதில், எதிர்ப்புகளையும், ஐயங்களையும் எழுப்பிவிடுவதை அன்றுபோலவே இன்றும் காணலாம். அன்று தமது பிள்ளைகள் சகல உலக இன்பங்களையும் அனுபவித்துத் தமது குடும்பத்துக்குப் பெருமையும் செல்வமும் தேடித்தரவேண்டும் என்னும் ஆசையால் பெற்றோர் தம் பிள்ளைகள் துறவறத்தில் ஈடுபடுவதை எதிர்த்தனர். ஆனால் பெரும்பாலான வேளைகளில் இந்த எதிர்ப்பு பிள்ளைகளின் தீர்மானத்தை இன்னும் உறுதிப்படுத்தியதென்றே கூறலாம். ஏனெனில் அது அவர்களுக்கு ஓர் அறைகூவலாக இருந்தது.

ஆனால் இன்று தேவ அழைத்தலைப்பற்றிய கருத்துமாறிவிட்டது. ஆனால் அதேசமயத்தில் ஒரு புதிய பிரச்சினையும் தோன்றியுள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்பின் பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்க ஊழியம்பற்றி அதிகம் பேசப்படுவதைக்கண்ட பலர் குருத்துவ, சந்நியாச அந்தஸ்தின் முக்கியத்துவம் குறைந்துவிட்டதெனத் தவறாக எண்ணுகின்றனர். உலகைத் தூய்மைப்படுத்துவதற்கு அதனோடு கலந்து வாழ்வது அவசியமாகுமென்றும், குருத்துவ சந்நியாச வாழ்வின் கட்டுப்பாடுகளும், எல்லைகளும் சமூகத்துக்குப் பணிபுரிவதற்குத் தடையாக இருக்கின்றன என்றும் பலர் இன்று கருதத் தலைப்பட்டுள்ளனர். இந்தத் தவறான எண்ணம் இளைஞர்களின் மனதில் பல ஐயங்களை எழுப்பக்கூடும். துறவறத் தொண்டை இல்லறத் தொண்டிலிருந்து வேறுபடுத்துவது அதன் வார்த்தைப்பாடுகள் மட்டுமல்ல. ஞானஸ்நானம்பெற்ற கிறிஸ்தவன் உலகில் வாழ்ந்து செயலாற்றுகிறான். துறவறத்தில் ஈடுபட்டவனோ உலகில் செயலாற்றியபோதும் அதனின்றும் தன்னை உயர்த்திக்கொள்கிறான். பொதுநிலையில் உள்ளவனைவிட நெருங்கிய விதத்தில் இறைவனோடு ஒன்றித்திருக்கிறான்

எல்லாக்குடும்பங்களிலும் தேவ அழைத்தல் இருக்குமென நாம் எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில் தேவன்தாமே தமக்குவேண்டியவர்களைத் தேர்ந்தெடுக்கிறார். ஆனால் தேவன் தேர்ந்தெடுக்கக் கூடியவர்களைத் தயார்செய்வது சமூகத்தின் கடமையாகும். தேவ அழைத்தலுக்காகச் செபம்செய்வதுமட்டுமல்ல, உயர்ந்த இலட்சியம் கொண்ட இளைஞர்களை உருவாக்குவதும், அவர்கள் தேவனின் அழைத்தலைச் செவிமடுக்கும்போது, அவர்களைப் பயிற்ற ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களுக்குப் பெருந்தன்மையோடு உதவியளிப்பதும் கிறிஸ்தவரின் தலையாய கடனாகும்.

## குருப்பட்டாபிஷேகம்

"இறைவன் ஒருகுடும்பத்திற்கு அளிக்கும் சிறந்தகொடை யாதெனில், அக்குடும்பத்திலிருந்து ஒருவரைக் குருவாக்குவதே" எனும் புனித சலேசியாரின் மணிமொழியானது மக்களின் உள்ளங்களிலே எக்காளத்தொனி போன்று இசைத்துக்கொண்டிருக்க, குரவர்கள் எண்பதின்மரும், குருத்துவ மாணவரும், கன்னியாஸ்திரிமார் நூற்றுவரும், உறவினரும், அன்பர்களும், அபிமானிகளுமாகப் பன்னூற்றுக்கணக்கான பக்தர்களும் சமூகமளித்திருக்க, பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே நம் மேற்றிராணியாண்டவர் சென்ற19ஆம் திகதி வெள்ளிவாரமன்று வண. சூசைதாசன் குருஸ், O. M. I. பிறதருக்குக் குருத்துவாபிஷேகம் செய்தபோது உண்டானபக்திப்பரவசமோ நாவினால் உரைக்குந்தரமன்று.

குருத்துவ அபிஷேகத்தின்போது ஆண்டகை அவர்கள் செய்துகொண்ட செபவேண்டுதல்களும், குருப்பட்டம் பெறவிருந்தவரிடம் கேட்டுக்கொண்ட கேள்விகளும், நடந்தேறிய அபிஷேக திருவைபவங்களும், கடைசியாக, "எல்லாம்வல்ல பிதாவே, இவருக்குக் குருப்பட்டத்தை அளித்தருளும்"— "எல்லாம்வல்ல பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதம் உம்மேல் இறங்கக்கடவது. குருத்துவத்தில் நீர் ஆசீர்வதிக்கப்பட்டவராய் இருப்பீராக..." என்றெல்லாம் உருக்கமாகச் சொல்லப்பட்ட அருள்மொழிகளும், ஆசிமொழிகளும் அனைவரது உள்ளங்களிலும் இன்பவெள்ளம் பெருக்கெடுக்கச்செய்தது

புதியகுரவரான வண. சூசைதாசன் குருஸ்சுவாமியார் வங்காலையைத் தமதுஜனனபதியாகக் கொண்டவர். இளவாலை சென் என்றீஸ், கொழும்பு சென்பீற்றேர்ஸ் கல்லூரிகளின் பழைய மாணவர். வங்காலையில் வசித்திருந்த காலஞ்சென்றதிரு. செலஸ்ரின் குருஸ்— இன்னுமே சீவந்தராயிருக்கும் ஞானசௌந்தரி லெம்பேட்தம்பதிகளின் புதல்வர். திரு. வேதம் குருஸ்அவர்களின் சகோதரர். இவர் லௌகிக கல்வியை முடித்துக்கொண்டு, அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள் சபையில்சேர்ந்து, கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள தேசிய குருமடத்தில் வேதசாஸ்திரம் ஆதியன கற்றுவரலாயினர். இக்குருப்பட்டாபிஷேக திருவைபவத்தின்போது வண. பிரான்சிஸ் டேனியல்பிறதர் தியாக்கோன்பட்டம் அருளப்பெற்றாரென்பது குறிப்பிடத்தக்கது. புதியகுரவர்

# தேவ அழைத்தல் ஞாயிறு 28-4-68

உயிர்த்த ஞாயிறுவுக்குப் பின் வரும் 2ஆம் ஞாயிற்றுக்கிழமையாகிய "நல்ல ஆயன்" ஞாயிறு வருடாவருடம் தேவஅழைத்தல் தினமாகக் கத்தோலிக்க உலகம் முழுவதிலும் அனுசரிக்கப்பட வேண்டுமென்ற பரிசுத்த தந்தையின் விருப்பத்திற்கிய்ய, இலங்கை மேற்றிராணிமார் இத்தினத்தை இவ்வருடம் தொடக்கமாக இலங்கையிலுள்ள எல்லா மேற்றிராசனங்களிலும் தேவ அழைத்தல் தினமாக அனுசரிக்க நிச்சயித்துள்ளனர்.

இதன்பிரகாரம் இவ்வருடத் தேவஅழைத்தல்தினம் நிகழும் சித்திரைமாதம் 28ஆம்தேதி ஞாயிற்றுக்கிழமை அனுசரிக்கப்படும். அன்றுதினம் பெற்றோர் தங்கள் வீடுகளிலும், துறவிகள் தங்கள் ஸ்தாபனங்களிலும், குருப்பிரசாதிகள் தங்கள் தேவாலயங்களிலும் செபத்தாலும், பக்திக் கிருத்தியங்களாலும், புத்தி உரைகளாலும் குருத்துவ, துறவற அந்தஸ்துகளுக்குத் தேவ அழைத்தல்கள் அதிகரிக்கும்படி தங்களாலான முயற்சிகள் எடுப்பார்களாக. இக்கருத்துக்காக யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே பின்குறிக்கப் பட்டிருக்கும் பக்திமுயற்சிகள் 28-4-68 ஞாயிறில் நடைபெறவேண்டுமென்று எல்லோரையும் தயவாக வேண்டுகின்றோம்.

1. அன்றைய பிரசங்கங்களில் தேவஅழைத்தலின் முக்கியத்துவத்தையும், அதன் சிறப்பையும் குருமார்எடுத்துக்காட்டுவார்களாக.
2. வசதியாகவிருந்தால் இந்நோக்கத்துடன் விசேஷ திருமணித்தியாலம், சற்பிரசாத ஆசீர்வாதம், கூட்டங்கள் நடத்துவது விரும்பத்தக்கது.
3. விசுவாசிகள் அன்று பங்குபற்றும் திருப்பலியையும், உட்கொள்ளும் தேவநற்கருணையையும் இக்கருத்துக்காக ஒப்புக்கொடுத்தல்.
4. தேவ அழைத்தல்கள் அதிகரிக்கும்படி குடும்பசெபமாலை செபித்தல்.
5. அன்றைய திருப்பலி விசுவாசிகளின் செபத்தில் பின்வரும் மன்றாட்டு சேர்த்துக் கொள்ளப்படும்:

"இளம் ஆத்துமாக்கள் நல்ல ஆயனின் குரலுக்குச் செபம் நிறைந்த கவனத்துடன் செவிசாய்த்து, அவரின் மந்தையின் நன்மைக்காகத் தங்களை உதார குணத்துடன் அவரின் பணிக்கு அர்ப்பணிக்க உதவிசெய்ய வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,"

எவ்விசாரணைப் பங்கிலாவது 28-4-68-ஐ ஏதாவது காரணத்தால் தேவஅழைத்தல் தினமாக அனுசரிக்க முடியாவிட்டால், தேவ அழைத்தல் தினத்தையும், அதற்குச் சம்பந்தமான அனுசாரங்களையும் அத்திகதிக்குப் பின்வரும் வேறொரு ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்போடப் பங்குக்குரவருக்கு அதிகாரம் உண்டு.

+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்—மேற்றிராணியார்;

20-4-68.

# கத்தோலிக்க தொழிலாளர் திருநாள்
# வைகாசி 1 ஆம் தேதி

நிகழ்ச்சி நிரல்:

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 7-30 | மணிக்கு | திவ்விய பூசை | (ஆசனக்கோவிலில்) |
| ,, | 8-30 | ,, | ஞானஒடுக்கம் ஆரம்பம் | |
| நண்பகல் | 11-00 | ,, | திருமணித்தியாலம் | |
| மாலை | 6-30 | ,, | பஜனை—தர்க்கப் பிரசங்கம் | (கடலனை மைதானத்தில்) |
| ,, | 7-30 | ,, | திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் | ,, |

நற்கருணை ஆசீர்வாதத்தின்முன் மகாவந். மேற்றிராணியாண்டவரால் தொழிலாளர்களின் ஆயுதஉபகரணங்கள் ஆசீர்வதிக்கப்படும்:

திருநாளுக்கு ஆயத்தமாக நிகழ்மதி 28-ம், 29-ம், 30-ம் தேதிகளில் பிற்பகல் 6-30 மணிக்கு புனித செபஸ்தியார் ஆலயத்தில் (திரிதின) ஆராதனை நடந்தேறும்.

## மிளகாய்ச் செய்கையில் சாதனை

தேசிய அரசாங்கம் தொடக்கியுள்ள அதிகமான உபஉணவுப்பொருள் செய்கைத் திட்டத்தின்கீழ் போத காதமனைக் குடியேற்றப் பகுதியிலே செல்விசித்திசாகிதாஎனும் பெண்மணி மிளகாய்ச்செய்கையில் ஈடுபட்டு ஒரு நல்லசாதனையை நாட்டியிருக்கின்றார். இப்பெண்மணி தனதுதோட்டத்திலே ஒருஏக்கர்காணியில் சுமார்40,000 மிளகாய்க்கன்றுகளை நட்டு ஏழுஅந்தர் மிளகாய் சேகரித்திருக்கின்றார்.

இலங்கைத் திருச்சபை உத்தியானத்திலே நீண்டகாலம் இனிதே திருத்தொண்டாற்றிவர எம்பெருமான் திருத்தயை பாலிப்பாராக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலஞ்சென்ற கலாநிதி மாட்டின் லூதர்கிங் காட்டியவாழ்க்கைவழி

(பி. சவரிமுத்து)

அமெரிக்க நீக்கிரோமக்களின் பெருந்தலைவரும், அன்புவழிநின்று காந்தியின் அகிம்சைவழிநின்று, அறத்தின் வழிநின்று தமது மக்களின் சுதந்திரத்திற்காக — அமெரிக்காவின் சமாதானத்திற்காக அயராது உழைத்துவந்த டக்றர் மாட்டின் லூதர்கிங் இனவெறிகொண்ட படுபாதகன் ஒருவனால் ஏப்ரல்மாதம் 4-ந்தேதி இரவு துப்பாக்கி கொண்டு சுடப்பட்டு உயிர்நீத்தார். இப்பெரியாருக்கு உலகப் பிரசித்திபெற்ற "சமாதான நோபல்" பரிசு 1964ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. பின்வருவன அவர் டிசெம்பர்மாதம் 11-ந்தேதி 1964ஆம் ஆண்டு நோர்வேயிலுள்ள ஒஸ்லோ சர்வகலாசாலையில் நிகழ்த்திய பேருரையின் சாராம்சம்:

"எனக்கும், ஐக்கிய அமெரிக்காவின் பிரஜாஉரிமைகளின் இயக்கத்துக்கும், நோர்வேப் பாராளுமன்றத்தின் நோபல் பரிசுக்குழுவினர் அளித்த ஒப்பற்ற கௌரவத்துக்கு நான்மீண்டும் நன்றி கூறாமல், இப்பேருரையையே ஆரம்பிக்க முடியாதவனாயிருக்கிறேன். இடையிடையே வாழ்க்கையில்ஏற்படும் சில சம்பவங்களைச் சொற்களில் எடுத்து விளக்குதல் இயலாத ஒருகாரியமாய் இருக்கிறது. அவற்றின் உட்பொருளை எங்கள் இருதயங்களிலேயே நாம் உண்மையாக உணரக்கூடும். அப்படிப்பட்ட ஓர் அனுபவநிலையிலேயே நான் தற்போதிருக்கிறேன்.

"இப்படிப்பட்ட உயர்ந்த மகிழ்ச்சியான நேரத்தில் நான் மாத்திரமல்ல, ஆனால், அகிம்சையை ஆயுதமாகக் கையிற்தாங்கி, மிகவும்ஓர்மத்துடன் சாதிப் பாகுபாட்டை எதிர்த்துநிற்கும் மக்களும் உவகை உறுகின்றனர். மனிதனின் மகத்துவத்தைப்பற்றி இவ்வாறு உலகம் உணர்ந்திருக்கிறது. இவர்களில் அநேகர் இளமையும், பண்பும் பொருந்தியவர்கள். வேறுசிலர் மத்தியவயதையும், வகுப்பையும் சார்ந்தவர்கள். பெரும்பாலானோர் ஏழைகளும், பாமரமக்களுமாயிருக்கின்றனர். ஆனல், அவர்கள் சகலரும் அவமானம் நிரம்பிய சாதிப்பாகுபாட்டை ஏற்றுக்கொள்வதிலும் பார்க்க, மானத்துடன் கஷ்டப்படுவதே சிறந்ததுஎன்பதைத் திடமாக நம்புகின்றனர். இந்தச் சமாதானத்தின் நோபல்பரிசை அவர்களின் சார்பிலேயே நான் ஏற்றுக் கொள்கிறேன்."

"உலகில் மக்களிடையே காணப்படும் ஒரு பாரிய பிரச்சினையை விளக்கும் நோக்கத்திற்காக இம்மாலைவேளையில் இவ்வுயர்ந்த பிரசித்திபெற்ற மேடையை உபயோகிக்க விரும்புகிறேன். தற்காலமனிதன் இப்பூவுலகத்தை மிகவும் அபாயகரமான ஒருநிலைக்குக் கொண்டுவந்திருக்கிறான். விஞ்ஞானத் துறையில் மிகவும் உச்சமான நிலையை ஆச்சரியத்துக்குரியமுறையில் அடைந்திருக்கிறான். யோசிக்கும் திறனைப் பெற்ற இயந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறான். விண்வெளியிலுள்ள உண்மைகளை உள்ளவாறு உணர்வதற்குகந்த கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறான். ஆழமான கடல்களைக் கடப்பதற்குப் பெரிய பாலங்களையும், விண்ணளாவும் விசித்திரமான பாரிய கட்டடங்களையும் கட்டியெழுப்பியிருக்கிறான். ஆகாய விமானங்களும், விண்வெளிக் கப்பல்களும் தூரத்தையே அழித்து, நேரத்தையே கட்டிவைத்து வானவெளியிலேயே பாதைகளை அமைத்திருக்கின்றன."

"தற்காலமனிதன் விஞ்ஞான — தொழில்நுணுக்கத் துறைகளில் அடைந்துள்ள விருத்தியின் கவர்ச்சியான வெளித்தோற்றங்களாக இவை இருக்கின்றன. இவ்வாறு விரைவாக விஞ்ஞானத்திலும், தொழில் நுணுக்கத்திலும் உலகம் முன்னேறியபோதிலும், இன்னும் கூடுதலான உயர்ச்சி இவற்றில் அடைய இருப்பினும், அடிப்படையான ஓர் அம்சம் குறைவாயிருக்கிறது."

"விஞ்ஞானத்துறையிலும், தொழில் நுட்பத்திலும் உன்னதஉயர்ச்சி ஏற்பட்டிருப்பினும், ஆத்மீகத்துறையில் குறைவுஎங்கும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. செல்வத்தில் உச்சநிலையை அடைந்தநாம் ஒழுக்கத்திலும், ஆத்மீகத்துறையிலும் தாழ்ந்தநிலையை அடைந்திருக்கிறோம். ஆகாயத்தில் பறவைகளைப் போலப் பறக்கவும், கடலில் மீன்களைப்போல் நீந்தவும் அறிந்திருக்கிறோம். ஆனல், உலகில் வாழ்வோர் எல்லோரும் சகோதரர்போல் வாழும்கலையை நாம்இன்னும் கற்கவில்லை."

"ஒவ்வொரு மனிதனும் இரண்டு நிலைகளில் சீவிக்கிறான். (1) உள்வாழ்க்கை. (2) வெளிவாழ்க்கை. உள்வாழ்க்கையென்பது கலை, இலக்கியம், ஒழுக்கம், சமயம்போன்ற ஆத்மீக நோக்கங்களைச் சார்ந்தது. மற்றையது நுட்பத்திறன், யந்திரத்திறன், உபகரணங்கள் ஆதியனவற்றைக் கொண்டு நாம்வாழுந்தன்மை. இவ்வெளிவாழ்க்கை உபகரணங்களில் எமது உள்வாழ்க்கையை இழந்ததே நமதுதற்கால முக்கியபிரச்சினையாகத் திகழ்கிறது. நாங்கள் வாழ்வதற்கு உதவியான ஏதுக்கள் நாம் வாழவேண்டிய நோக்கத்தையே முற்றாக மாற்றிவிட்டிருக்கின்றன. தற்கால வாழ்வைத் 'தோரோ' என்றபுலவர் சுருக்கமாகக் கூறியவாறு "திறமான ஏதுக்களைக்கொண்டு இழிவானமுடிவு" என்று கூறலாம். இதுவே தற்கால மனிதனின் தவிர்க்கமுடியாத பிரதானமான பிரச்சினையாக இருக்கிறது. நாங்கள் வாழவிரும்பினல் எங்கள் ஒழுக்க—ஆத்மீகக் குறைபாடு நிவிர்த்திசெய்யப்படுதல்வேண்டும். எங்கள் ஆத்மீகத் துறையில் வளர்ச்சிகுன்றினல், பொருளாதாரவிருத்தி சொல்லமுடியாத தீங்கை விளைவிக்கும். மனிதவாழ்க்கையின் உட்பகுதியை வெளிப்பகுதி அடிமையாக்கியபோது உலகில் இருண்ட போர்மேகங்கள் தோன்றின. மூன்று பிரச்சினைகள் தற்காலமனிதனின் முக்கிய பிரச்சினைகளாகத் திகழுகின்றன. ஒழுக்க—ஆத்மீகத்துறைகளில் காணப்படும் குறைவுகளின் காரணமாகவே இவை தோன்றின எனலாம்.'

1. அதி சம்பந்தமான அநீதிகள்: இவற்றை ஒளிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் உலகின் பலபாகங்களிலும் தலைதூக்கி நிற்கின்றன. ஐக்கிய அமெரிக்காவில் நீக்கிரோமக்கள் ஈடுபட்டிருக்கும் தகராறுகள் மக்களுக்கிடையில் சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்டும் நோக்கமாகவே நடைபெறுகின்றன. போர்வலிமையைக் கொண்டு சாதிஅநீதிகளை அழிப்பது முடியாததும் முறைகேடான காரியமுமாயிருக்கிறது. "இம்சை" (கொடுமை—பலாத்காரம்) பெரும்பாலும் நிரந்தரமற்ற முடிவுகளைக் கொண்டுவரும். தேசங்கள் தங்கள் சுதந்திரத்தைப் போர்மூலம் பெற்றிருக்கின்றன. ஆனல் தற்காலிக வெற்றிகள் நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டுவர முடியாது. யுத்தங்கள் ஒருபோதும் சமூகப் பிரச்சினைகளைத் தகுந்தமுறையில் தீர்ப்பதில்லை அவற்றால் புதிய மிகவும் சிக்கலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. "இம்சை" (கொடுமை — பலாத்காரம்) கீழ்நோக்கிச்செல்லும் புரியுள்ள ஓர் அழிவுஆயுதமாக எல்லோருக்குமிருக்கிறது. அது தன்மானத்திற்கு எதிரானது; ஏனெனில் விரோதியைத் தாழ்மைப்படுத்தி எல்லோரையும் வெறுக்கப்பண்ணுகிறது. அது அழிவிற்கு — ஆக்கத்திற்கல்ல — வழியாக இருக்கிறது. அது வெறுப்பில் வேரூன்றி வளருகிறது. விருப்பில்அல்ல சகோதரத்துவத்தைப் பாழாக்குகிறது. சமூகத்தை அழிக்கிறது. பலாத்காரம் தனக்கே தீமையை விளைவித்துக்கொள்கிறது. ஆனல் அகிம்சாமுறைகள் ஆத்மீக ஒழுக்கத்துறைகளில் ஏற்படும் பிற்போக்கை அகற்றி முன்னேற வழிவகைகள் வகுக்கின்றன. ஒழுக்கமுறைகளைக் கைக்கொள்ளல் ஒழுக்க இலக்குகளை அடைய உதவிசெய்கிறது. அகிம்சை மிகவும் வலிமையான ஆனல், நேர்மையான ஆயுதமாய் அமைகிறது. சரித்திரத்தில் பிரசித்திபெற்ற ஆயுதம் அது. காயமேற்படாதவாறு வெட்டுகிறது அது. அதை உபயோகிப்பவனையே உயர்த்துகிறது அகிம்சை."

2. நாம் உலகில்காணக்கூடிய இரண்டாவது தீமை வறுமையெனலாம். அது உலகின் எல்லாத்தேசங்களிலும் எல்லாக் கிராமங்களிலும் காணப்படுகிறது. உலகில்வாழும் மக்களில் சுமார் மூன்றுபேரில் இருவர் இரவில் பட்டினியுடன் படுக்கச் செல்கின்றனர். அவர்களுக்குப் போதிய உணவில்லை; போதிய உடையில்லை; குடியிருக்க வீடில்லை; படுக்கப் படுக்கையில்லை. பலர் வீதியோரங்களில் விழுந்து படுப்பார்கள் அநேகர் ஒரு வைத்தியனைத் தங்கள் வாழ்க்கையில் கண்டதேயில்லை. எனவே வறுமையை எதிர்த்து உலக மக்களனைவரும் போராடவேண்டிய காலம் அண்மியிருக்கிறது."

"செல்வம் கொழிக்கும் நாடுகள், விருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும், விருத்திகுறைந்த நாடுகளுக்கும் ஏராளமான உதவிசெய்யவேண்டும். இவ்வாறு கல்வியற்றவர்களுக்குப் பாடசாலைகளை நிறுவவும், பட்டினியில் வாழ்பவருக்கு உணவளிக்கவும் உதவிசெய்ய வேண்டும். பிறர்அன்பு நிறைந்தநாடு தான் ஒரு பெரியநாடாகத் திகழமுடியும். எங்களிலும் எளியவர்களில் அன்பும் அனுதாபமும் இல்லாதநாடு ஒரு சிறந்த பெரியநாடாக இருக்கமுடியாது. செல்வர்களுக்கும், எளியவர்களுக்கும் இடையில் காணப்படும் வித்தியாசத்தைப்போக்கப் பொருளாதாரம் நிறைந்தநாடுகள் அயராது உழைக்க வேண்டும். உலகில் எம்மனிதனுவது தனித்து வாழ்வதில்லை. எனவே ஏழைகள் சுபீட்சமாகவாழ்ந்தால்தான் செல்வர்கள் சந்தோஷமாக வாழமுடியும். நாங்கள் எல்லோரும் எமது அயலாரின் — சகோதரனின் பாதுகாவலாளிகள். "எம்மனிதனும் ஒரு தீவல்ல" நாம் சகலரும் ஒருவர் ஒருவரில் தங்கியிருக்கிறோம்."

3. "உலகில் நாம்காணும் மூன்றுவதுதீமை யுத்தம். பொதுமக்களை அழிக்கும் ஆயுத ஆயத்தங்களில் பல வல்லரசுகள் முனைந்து நிற்கின்றன என்று அண்மையில்நடந்த — தற்போதுநடக்கின்ற பலசம்பவங்கள் உண்மை பகருகின்றன. போராயுதங்களைத் தயாரிக்கும் நுட்பத்துறைகளில் மிகவும் பிரசித்திபெற்ற நாடுகளின் மிகவும் சிறந்த விவேகிகள் — விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கின்றனர். இவ்வாறு போரை அழிப்பதற்கல்ல, அதை அதிகரிப்பதற்கே அகிலஉலகமும் ஆர்வத்துடன் உழைத்துவருகிறது. பல நாடுகளுக்கிடையில் பல அணுக்குண்டு ஆயுத உற்பத்தித்தடை சம்பந்தமான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பினும் அணு ஆராய்ச்சிகள், ஆயுதங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. எனவே யுத்தம் புரிவதிலேயே மக்களின்மனம் ஆழ்ந்திருக்கிறது எனலாம். தற்காலத்தில் போருக்கு உலகில் இடமேயில்லை. ஏனெனில் தற்காலப்போர் ஒரு நாட்டையல்ல, ஒரு தேசத்தையல்ல, அகில உலகத்தையுமே அழிக்கவல்லது. உலகில் மக்கள் சீவிக்க உரித்துடையவராயின் தற்காலப் போருக்கு உண்மையாகவே உலகில் இடமில்லை. தற்காலப் போரில் வெற்றியடைவதும் ஒருதேசத்துக் குரியதல்ல. ஒருநாடு அடையும் வெற்றியாலோ அல்லது தோல்வியாலோ எல்லாநாட்டு மக்களும் பாதிக்கப்படுவர்.

எனவே அகிம்சாமுறையைப் பின்பற்றி அகிலஉலகமக்களும் அமைதியையும், அமெரிக்கையையும் அடைவதற்கு ஆவனசெய்ய நாம் எல்லவரும் முன்வருவோமாக. "மக்கள் அனைவரும் ஒருகுலம்; அவர்கள் சகலரும் வணங்குவதும் ஒரேதேவன்" என்பதை நாம எவரும் மறத்தலாகாது.

---

✝

## ஜெயநாதன் யேம்ஸ்

அவர்களின்

## 14-ம் ஆண்டு நினைவு

மறைவு 21-4-54

இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காகக் கடந்த 22-4-68 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு சில்லாலை, பரி. ஆரோக்கியநாயகி ஆலயத்தில் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவரின் ஆன்ம சாந்திக்காக மன்றாடும்படி வேண்டிக் கொள்கிறோம்.

பெற்றோர், சகோதரர்.

55-68

---

## 20-வது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் 20-வதுஆண்டு நிறைவுவிழா 14-468 ஞாயிறுவாரம் கழகமுன்றிலில் கொண்டாடப்பட்டது. விழா ஆரம்பத்தில் புனிதவளன் சிறுவர்கழக தலைவர் கே. டுவைனர் வரவேற்புரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உயர்திரு வி. ஜி. எஸ். டேவிட் அவர்கள் கழக கொடியை ஏற்றிவைக்க விழா ஆரம்பமானது.

இதனை அடுத்து அமரர் வின்சென்ற் அரங்கில் பிரதம விருந்தினர்களை கழக தலைவர் அ. யேசுதாசனும், புனிதவளன் மாதர்கழகதலைவி திருமதி அகஸ்ரீன் அல்வினம்மா அவர்களும் மலர் மாலைசூட்டி வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து காலஞ்சென்ற கழகதலைவர் சி. வின்சனின் ஆன்மசாந்திக்கு இரு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

அடுத்து கழகதலைவர் தமது உரையில் கழகத்தின் ஆரம்பம்பற்றியும், கழகம் சமூகத்துக்கு எவ்விதம் தொண்டாற்றமுடியும் என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்

புனிதவளன் மாதர்கழகத் தலைவி தமது உரையில், புனிதவளன் விளையாட்டுக்கழகம் நாட்டுக்குச் செய்துவரும் சேவையைப் பாராட்டினர். இக்கழகத்தின் உதவியுடன் எமது மாதர் கழகமும் ஆரம்பிக்கப் பட்டுள்ளமையினல் நாட்டிற்கு நாமும் பலதொண்டுகளை ஆற்றமுடியுமெனக் கூறிநின்றார்.

பிரதம விருந்தினர் தமது உரையில் புனிதவளன் விளையாட்டுக்கழகத்தின் தன்னலமற்ற சேவைகளை நான் இங்கு கடமைபுரிந்தபொழுது அறிந்தேன். இதன் காரணமாகவே நான் இவ்விழாவில் கலந்துகொள்ள விரும்பினேன். இக்கழகத்தில்உள்ள பலரை எனக்கு நன்குதெரியும். ஒரு விளையாட்டுக் கழ

[தொடர்ச்சி மறுபக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

**அன்புடை நேயர்களே !.... அல்லேலூயா வாழ்த்துக்கள் !....**

ஆதிக்கிறிஸ்தவர்கள் காலத்தில் இளம் பெண்ணொருத்தி இருந்தாள் யேசுவின் அன்பிலும், போதனையிலும் அதிக பற்றுடைய இந்த நங்கை செல்வச் சிறப்பில் மேம்பட்டிருந்தும் தனது பொருள், பண்டம், வீடு யாவற்றையும் விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு உத்தமமான வாழ்க்கை நடத்தி வந்தாள். இவள் "கிறிஸ்துவள்" என்றறிந்த அவ்வூர் அதிகாரி அவளை அழைத்துக் கத்தோலிக்க சமயத்தைத் துறந்துவிடும்படி அவளை நயத்தாலும், பயத்தாலும் வற்புறுத்தினன்: "பெண்ணரசியே!... பார், நீ வணங்கும் யேசு கடவுளல்ல. யேசு கடவுளாயிருந்தால் அவர் மரித்திருக்கமாட்டாரே. அவர் மரித்தாரென்பது நிச்சயமான விஷயமாயிற்றே" என்றான் அதிகாரி "யேசு மரித்தார் என்பது உமக்கு எப்படித் தெரியும்?" என்று எதிர்வினுத் தொடுத்தாள் அந்தக் கன்னிகை. "அதுதான் உங்கள் வேதாகம நூலே சொல்கிறதே" என்றான் அதிகாரி. "சரிதான் பிரபோ!... எமது வேதாகம நூலில் யேசு மரித்தார் என்று குறிப்பிடப்படுவதை நீர் ஏற்றுக் கொள்கின்றீர்தானே. அப்படியாயின் அடுத்த பக்கங்களைப் புரட்டி, அவர் மகிமையாக உயிர்த்தெழுந்த வரலாற்றையும் வாசித்து ஏற்றுக்கொள்ள நீர் பின்வாங்குவது ஏனோ"?... என்றாள் அம்மாதரசி. அதிகாரி வெட்கித் தலைகுனிந்தான்.

ஆம்!... நமது வேதசத்தியத்திற்கு அடி அத்திவாரமான யேசுவின் மகிமையான உத்தானத்தின் உண்மையே எமது வேதத்திற்குப் பெருமையளிக்கின்றதல்லவா?...

—ரோஜா

# மங்கையராகப் பிறப்பதற்கே!.....

**அண்மையில் யாழ்நகரின் பங்குவிசாரணைகளொன்றில் மாதர் கழகமொன்றின் அங்குரார்ப்பண விழாவில் யாழ்நகர் கன்னியர் கழக ஆசிரியை திருமதி மார்கறெற் சவரிமுத்து அவர்கள் ஆற்றிய உரையில் யான் ரசித்த ஒருபகுதி......படியுங்கள்!.......ரசியுங்கள்!... பெருமை கொள்ளுங்கள்!... ..செயலாற்றுங்கள்......**

## பெண்மையின் உயர்வு:

"தமிழகத்தின் பண்டைய வரலாற்றில் பெண்கள் சிறப்பிடம் தாங்கி நின்றமை நீங்கள் யாபேரும் அறிந்ததே. வீரத்தாய்மார், மறக்குடிப் பெண்டிர், பத்தினி திலகங்கள், பத்தினி விரதங்காத்த தெய்வப் பெண்கள் பலர் அக்காலச் சரிதையிற் திகழ்ந்தனர். இடைக் காலத்தில் அவர்கள் நிலை குலைந்து அடிமைத்தளை பூட்டப்பட்டு அறியாமை இருளில் தள்ளுண்டு வீட்டினுள் சிறையிருந்தனர். ஆனால் இக்காலத்திலோ புரட்சிக்கவி பாரதி படைத்தளித்த புதுமைப் பெண்ணுருவாய்த் தோன்றியுள்ளனர் புதுயுக மாதர். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" என்று கங்கணங்கட்டி நின்றார் பாரதி. பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபட்டு தம் சூழ்நிலைத் தரத்தின் உயர்வுநாடிச் செயலாற்ற வேண்டுமென்பது இந்நூற்றாண்டின் குறிக்கோள். இவ்வுயர் பதவிக்கு உரியவராயிருப்பதற்கேற்ற கல்விச்சிறப்பு, பண்பாட்டு வளம் வாய்க்கப் பெற்றவராய்த் திகழும் பெண்மணிகள்தாம் நம் சமூகத்தை, நம் நாட்டை, ஏன் உலகத்தையே சீரிய நெறியிற் திருப்பக்கூடிய ஆற்றல் வாய்ந்தவராவர்.

## தாய்மையின் சிறப்பு:

பெண்கள் உலகிற் பெறும் பதவிகள் அநேகம். சகல துறைகளிலும் உழைக்கும் வன்மை படைத்தவர். ஆண்களுடன் சரிபொருத்த வேன்று சித்தி காமாய்த் தொழில் புரிவர். என்றாலும் தாய் என்ற பதவியே அவர்களுக்கென இருக்கும் உயர்தனிப் பதவியாம். "அம்மா!..." என்று குரலெழும் போது அவ்வழைப்பில் புதைந்து கிடக்கும் அன்புப் பெருக்கு, பொறுமைச் சிறப்பு, நம்பிக்கையின் உறுதிப்பாடு தான் எம்மாத்திரம்?... இளம் பெண் மணிகள் விவாகமாகிக் குழந்தை பெறும் வரையும் இத்தாய்மை இன்பத்தை நுகரக் காத்திருக்க வேண்டியதில்லை. வாழ்க்கை பூராவுமே பெண் ஒருத்தி தாயாகத் திகழ வாய்ப்புகளுண்டு. தன் உதவி நாடும் இளைய சகோதரருக்குத் தாயினிடத்தை வகிக்கிறாள். தவறிப் போகும் சகோதரன் தகுதி வாய்ந்த பெண் சகோதரத்தினிடம் குறையிரந்து செல்கிறான். முதுமை அடைந்த பெற்றோருக்குத் தாய்மை நிலைதாங்கிப் பராமரிக்கிறாள். துறவறத்தில் ஈடுபட்ட பிறிதொரு பெண் தன் கண்காணிப்பிலிருக்கும் பெரியோர் சிறியோர் யாவருக்குமே தாயாய் விளங்குகின்றாள். பெண்ணாகப் பிறந்ததின் பெரும் பேறு தாய்மை அன்பு பூண்டு தன்னை நாடும் சகலருக்கும் பணி ஆற்றுவதே.

## இளமையின் மதிப்பு:

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடவேண்டுமம்மா!... அதுவும் இளம் பெண்ணாய் உலகில் வாழ்வதற்குக் கொடுத்து வைக்க வேண்டும். இளமையின் எல்லையைத் தாண்டிச் சென்ற என் போன்றவர் இக்கூற்றின் முழுப்பொருளையும் தெள்ளிதின் உணர்ந்து கொள்ள வல்லர். இளமைக்காலம் உயிர்ப்பின் காலம். வசந்தத்தின் புனிதமெல்லாம் ஒருங்கே மிளிரும் காலம். இளமையிற் செயற்கரியது எதுவுமேயில்லை. பண்பட்ட உள்ளம், தெளிந்த அறிவு, தாராளசிந்தை இவை இளமையுடன் கூடின் அது மாந்தரை அமரருள் உய்த்துவிடும். புனிதமான இவ்விளமைக் காலம் பொலிவின் பெருக்கைப் பயன்படுத்துவது உங்கள் முதற்கடன். பயன்படுத்துவதிலும் பாகுபாடு உண்டு. தனக்கெனப் பயன்படுத்துவது, பிறர்க்கெனப் பயன்படுத்துவது, இ[illegible] பயன்படுத்துவது. நடுவண் த[illegible] குறிக்கோளாய் அமையின் முதலும் கடையும் தானே வந்தமையும். பிறர்நலன் கருதி ஆவனபுரிந்து பிறர் குறைதீர்த்து வைப்பதினால் உள்ளத்திருப்தி ஏற்படுகின்றது. இத்திருப்தியையொத்த நிரந்தர இன்பம் வேறெதிலும் நீங்கள் காண முடியாது என்பதையும் ஈண்டுவற்புறுத்திக்கூற விரும்புகின்றேன். மங்கையராகப் பிறந்த நோக்கினை மங்களகரமாகச் செயலாற்ற முன்வாருங்கள்!

வணக்கம்.

# யேசுவின் திருப்பாடுகளின் சித்திரம்

— எஸ். அரியரெத்தினம் —

### உயிர்ப்பு

ஞாயிறு வாரத்திலே—இள
ஞாயிற்றின் ஒளியிற் குளித்தாற்போல்
தேயிருள் நேரத்திலே—எங்கள்
தெய்வமகன் தானுயிர்த் தெழுந்தார்!
வாயினிற் காவல்செய்தோர்—நல்ல
வசமாகத் துயிலில் மூழ்கியிருந்தார்
பாய்ந்திடும் ஒளிபட்டு—அவர்
பதைபதைத்து எழும்போது;

ஒளியெலாம் ஒன்றாகச்—சேர்த்து
உருக்கிச் செய்த உருவம்போல்
விழியெலாங் கூசஅவர்—சத்திய
வேந்தனைக் கண்டங்கு திகைக்கையிலே
அழிந்தது ஓர்விநாடி—அமலனும்
அவ்விடம் விட்டகன்றார்
விழித்தனர் வீரர்கள்—வெறும்
கல்லறை தன்னைக் கண்டங்கு!



பருதியும் எழும்முன்னே—குளிர்ப்
பனி விழுங்காலைப் பொழுதினிலே
கருதியே சிலபெண்கள்—வந்து
கல்லறை திறந்தது கண்டஞ்சி
ஒருவழி தெரியாது—அவர்
உள்ளூற நடுங்கிக் கிடக்கையிலே
இரு எழிற் கன்னியர்—அவரை
எதிர்வந்து ஏதோ வினவுவார்.

'ஆரைநீர் தேடுகிறீர்?—நீங்கள்
அடக்கஞ் செய்தவர் ஈங்கில்லை;
தேரீரோ அவர்மொழியை—அன்று
திருவுளம் பற்றின படியே
ஈரொரு நாளினிலே—இந்த
இளங்காலை பிறக்கும் போதினிலே
பேரொளி வடிவாக—அந்தப்
பெம்மானும் எழுந்தனர்' என்றனரே!

### (வெளிப்படல்)

முதன் முதலாகவே—மரியாள்
முன்னிலே சேசு தோன்றினரே!
பதுமையோ மிகவியந்து—அவர்
பதங்களை வணங்கப் பணிந்திடவே
'இதுஉன்னால் ஆகாது'—என்று
சேசுவும் அவளுக்கு உரைபகர்ந்து
'இதை என்றன்சீடருக்கு—உடன்
இயம்பெ'னக் கூறி மறைந்தனரே!

எருசலேம் நகரிருந்து—இருவர்
எம்மாவுசுக்குப் போம்போது
அருகிலே யேசுபிரான்—அவர்
அறியாமற் கூடநடந்து சென்றார்
பெரிதாக ஏதோஅவர்—தமக்குள்
பேசுதல் கேட்டு அதற்குரிய
பொருள்தனை உணர்ந்ததுமே—அவர்
புரிந்திட மொழிந்து சென்றனரே!

### (வேறு)

பளிங்குக் கலசத்துட் கதிரொளி
பட்டு உட்செல்வது போல
வெளிவரா தஞ்சியோர் அறையினுள்
வெளிறிப் போயிருந்த சீடர்களுக்கு
வெளிப்பட்டார் தேவமகன் தம்
வெற்றிப் பிரதாப உருவோடு!
விழித்தனர் கண்டவர், வியந்தனர், கல்லாய்
விறைத்துப் போய்நின்றனர் அப்படியே!

சுயநிலைக்கு வராது இன்னுமவர்
சுரூபங்கள் போல நிற்கக்கண்டு
பயமேதற்கு உங்களுக்கு? என்னைப்
பாருங்கள் என்றவர்க்கு மிக
நயமாக எடுத்துரைத்து, காயத்
தழும்பெலாங் காட்டி, அவர்கள்
வியப்பெலாம் போக்கி அவரோடு
மேலுங்கதை பேசியிருந்தும்,

இருளும், ஒளியும் சந்திக்குமிடத்தில்
இருக்கின்ற இளங்காலைப் போதுபோல்
அரைகுறை ஐயமும் ஆனந்த வெள்ளமு
மாகஅவர் அலைமோத, அதையும்
திரும்பவுந் தன்பாடுகளைப் பற்றிச் சொல்லித்
தெளிவாக்கி, தேவ பிதாவின்
திருவாக்குப்படி தூய ஆவியை
அனுப்புவோ மென்றவர்க் கருளினர்!



### (விண்ணுலகு எழல்)

பெற்ற தம் அன்னையோடு
பிரிய தம்சீடரும் கூடியிருக்க
உற்றநல் மொழி யுரைத்து
உன்னதல் லன்போடு ஆசீர்வதித்து,
வெற்றித் திருவினை அணிந்தோன்
விண்ணினை நோக்கி எழுந்திடவே
சற்றுமிதை எதிர்பாராச் சீடர்
சமைந்தனர் கல்லாக அவ்விடத்தே!

விண்ணினில் எழுந்த தேவன்
வெண் முகிலால் சூழ்கையிலே
தண்ணிலா போல எழில்
தாங்கிடும் தூதர்கள் தம்மினிய
பண் மொழியாலே சீடருக்கு
'பரலோகம் எழுந்த சேசுபிரான்
இன்னொரு முறை இவ்வுலகு
எழுந்தருள்வார்' என இயம்பினரே!

(முற்றும்)

# கத்தோலிக்க தமிழாசிரியர்சங்கம்

புத்தளம்— சலாபப்பகுதிக்கத்தோலிக்க தமிழாசிரியர்களின் விசேட பொதுக்கூட்டம் புத்தளம் புனித மரியாயின் தமிழ் வித்தியாலயமண்டபத்தில் கடந்தசெவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிக்குத் தலைவர் திரு. எஸ். எஸ். றெட்ஜீக்கு அவர்கள் தலைமையில் கூடியது. ஆரம்பத்தில் மேற்படி வித்தியாலயமாணவிகள் வரவேற்புக் கீதங்கள்பாடியபின் தலைவரும், செயலாளர் திரு. வீ. எஸ். பிள்ளை, சங். சகோதரி எட்விஜ், சலாப மேற்றிராசனக் கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமைக்காரர் வண. பிதா பீட்பெர்ணண்டுவும் "மேற்படி சங்கத்தின் நோக்கம், பலாபலன், செயல்திட்டங்கள்"என்பனவற்றை விளக்கி இனிய சொற்பொழிவுகளாற்றினர். கத்தோலிக்க மதபீடத்துடன் ஆராய்ந்து அரசாங்கத்திற்குச் சமர்ப்பிப்பதற்கெனப் பதின்மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஈற்றில், சிற்றுண்டியுபசரணைகளுடனும், ஆசிரியர் திரு. ஏ. ஈ. பெர்ணண்டுவினது வந்தனோபசாரத்துடனும் மாலை7மணிக்குக் கூட்டம் சுபமே கலைந்தது.

# 20-வது ஆண்டு ......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் 20ஆண்டுகள் வரை தொடர்ந்து இயங்குவது பாராட்டவேண்டிய விஷயம். இன்னும் இக்கழகம் ஒரு மாதர் கழகத்தினை ஆரம்பித்துள்ளமை மேலும் வரவேற்கத்தக்கதெனவும் தமது உரையில் குறிப்பிட்டார்.

இதனைத்தொடர்ந்துகழகத்தின் பிரதமகாப்பாளர் வண. பிதா பெனெற் கொன்ஸ்ரன்ரைன், கழக ஆரம்பதலைவர் டக்றர் ஏ. பி. சி. பிலிப்ஸ், யாழ் மாவட்ட காரியாதிகாரி பிள்ளைநாயகம், திரு. ஜே. ஏ. செல்வநாயகம், J. P. ஆகியோரும் கழகம் சமயத்துறை, சமூகத் துறை இவைகளிற்காட்டும் ஊக்கத்தையும், சேவையையும் பாராட்டிப் பேசினர். 20ஆம்ஆண்டு நிறைவுமலரைக் கழக அங்கத்தவரும், கிராமசேவையாளருமான திரு. அ. அலெக்சிஸ் அறிமுகம் செய்துவைத்தார்.

ஈற்றில் கும்மிநடனம், குறத்திநடனம், நாடகம், உடலமைப்புக் காட்சிகளுடன் விழா நிறைவாயது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளரின் பாதுகாவலராம் அர்ச். சூசையப்பர் பேரில்

# பரிசுத்தபிதா இயற்றிய செபம்

மகிமை நிறைந்த பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! நசரேத்தின் தாழ்மையும், நேர்மையுமுள்ள தொழிலாளரே! ஊக்கமுள்ள முயற்சியாலும், யேசுவுடனும் மரியாயுடனும் கொண்ட ஆச்சரியமான ஐக்கியத்தாலும் பூரணமாக்கப்பட்ட வாழ்க்கையின் மாதிரிகையைச் சகல கிறிஸ்தவர்களுக்கும் — சிறப்பாக எமக்குத் தந்தருளியவரே! எமது அனுதின உழைப்பில் உதவியளித்துக் கத்தோலிக்க தொழிலாளராகியநாமும் தேவனைத் தோத்திரிப்பதும், எம்மை அர்ச்சிப்பதும், நாம் வாழும் சமூகத்துக்குப் பயன்படுவதுமாகிய எமது முயற்சிகளின் உச்சித லட்சியங்களை நாம் அடையச் செய்தருளும்.

எமது அதிபட்சம் நிறைந்த பாதுகாவலரே! தாழ்மை நிறைந்ததும், களங்கமற்றதுமான இருதயத்தையும், எங்கள் தொழிலில் பற்றுதலையும், உடன் தொழிலாளர் மட்டில் நேசபான்மையையும், பூலோக வாழ்க்கையின் தவிர்க்க முடியாத துன்பங்களில் தேவ சித்தத்துக்குப் பணிவையும், அவைகளைச் சகிப்பதில் சந்தோஷத்தையும், சமூகத்திற்கு நாம் செய்யவேண்டிய சிறப்பான தொண்டைப் பற்றிய உணர்வையும், எமது கடமைப்பாட்டின் பொறுப்பையும், கட்டுப்பாட்டுக்கு அமைந்த போக்கையும், செபப் போக்கையும், எசமான்கள் மட்டில் அமைச்சல் மரியாதையையும், உடன் தொழிலாளர் மட்டில் சகோதர பான்மையையும், எம்மைச் சார்ந்தோர் மட்டில் அன்பையும், தயைதாட்சணியத்தையும் எமக்கு ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுத்தந்தருளும்.

எமது தொழிலின் பலனை நேர்மையாய் அனுபவிக்கும்படியாக யாவும் அனுகூலமாயிருக்கும் சுபீட்ச காலத்தில் எம்முடன் இருந்தருளும். வானமே இடிந்து எம்மை அழுக்குவதுபோலவும், நாம் கையாளும் தொழிற்கருவிகளுங்கூட எம்மை எதிர்ப்பதுபோலவும் துன்பம் வந்துற்ற காலத்திலே எமக்கு ஆதரவாயிரும்.

உம்முடைய எளிய பட்டறையின் ஒரு மூலையில் அமைதியாய் அமர்ந்து நூல்நூற்றுப் புன்னகை ததும்பிய முகத்தினளாயிருந்த மிகவும் இனிய உமது பத்தினியும், எங்கள் திருத்தாயாருமான மரியன்னையை உமது மாதிரிகைப்படி நாம் என்றும் கண்டுபாவிக்க அருள்புரிந்தருளும், உம்மோடுகூடத் தச்சப்பட்டறையில் உழைத்த யேசுவிடமிருந்து எமது பார்வை அகலாதிருக்கச் செய்தருளும். இவ்விதமாய்ச் சதாகாலமும் எம்மை மோட்சத்தில் காத்திருக்கும் நித்திய பேரானந்த வாழ்வுக்கு அச்சாரமாகப் பூலோகத்தில் நாம் சாந்தியும் பரிசுத்தமுமான வாழ்க்கை நடத்திவரச் செய்தருளும்.

ஆமென்.

# சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம் நாவாந்துறை தலைமையாசிரியர் ச. நீக்கிலாப்பிள்ளை தமது ஆசிரிய சேவையிலிருந்து 28-2-68-ல் இளைப்பாறினார். நாவாந்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் சம்பத்திரிசியார் கலலூரியில் லண்டன் மற்றிக்கிலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார். கொலம்பகம் ஆசிரிய கல்லூரியில் ஓர் ஆசிரியராக வெளிவந்தார்.

ஆசிரியர் அன்பு, ஆண்டவன்நேசம், கடமையுணர்ச்சி, நல்லொழுக்கம், அயராதஉழைப்பு என்னுஞ்சிறந்த குணங்களை இலட்சியமாகக்கொண்டு, மன்னார் புனிதசவேரியார் கல்லூரி, யாழ்/கொலம்பகம் சாதனாப்பாடசாலை, அல்லைப்பிட்டி, முருங்கன், நாவாந்துறை றோ. க. பாடசாலைகளில் பணியாற்றியுள்ளார்.

கல்விமான்கள் விஞ்ஞானம் தமிழில் படிப்பிக்க முடியாது என்றெண்ணிய காலத்தில் 1936-ல்இருந்து உயர்தர வகுப்புகளில் தமிழில் விஞ்ஞானம், உயர்தரகணிதம் படிப்பித்ததோடு, பேச்சுப்போட்டி, உடற்பயிற்சி, நாடகம் முதலிய துறைகளிலும் மாணவர்க்குத் தேர்ச்சிகொடுத்தமையால் மாணவர் பலர் பயன்அடைந்து இலங்கையின் பலமாகாணங்களிலும் ஆசிரியாரகவும், பட்டதாரிகளாகவும், சிறந்த தொழிலாளிகளாவும் பரிமளிக்கின்றனர்.

இவரின் சேவையைப்பாராட்டி யாழ்/மாவட்ட அரசாங்க உதவி அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த கலைவிழா பாடசாலையின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கச்செய்துள்ளது. நாவாந்துறைப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் கத்தோலிக்க பாடசாலைகளின் முன்னாள் உதவிமனேச்சர் வண. பிதா ஏ. பிரான்சீஸ் தலைமையில் விழா எடுத்தனர். யாழ்/அமலோற்பவ நாயகி குருக்கள்சபை அதிபர் வண. பிதா சற். என். குரூஸ் தலைமையில் மதிய விருந்தளித்தனா. G. C. E. உயர்தர மாணவன் செல்வன எ. பி. ம. ஜெயராஜ் தலைமையில மாணவ, மாணவிகள் ஒரு விருந்தளித்தனர். பழையமாணவர்களும, உடனாசிரியர்களும, நண்பர்களுஞ் சேர்ந்து புனிதசாள்ஸ் பாடசாலை மண்டபத்தில, இளைப்பாறிய ஆசிரியர் திரு. வீ. எம். ஆசீர்வாதம், ஜே. பி. தலைமையில் பாராட்டுவிழா நடாத்தினர். பழையமாணவரும், ஆசிரியருமான எம். விக்ரர், எ. அருட்பிரகாசம், திரு. இ. குமரையா, யாழ்/வட்டார தமிழ்ஆசிரியர் சங்கத்தலைவர் இ. குமாரசாமி, முருங்கன் முன்னாள் பாடசாலை முகாமையாளர் வண. பிதா தேவராசா, தமிழ்காங்கிரஸ்காரியதரிசி திரு. கா. சங்கரப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினார்கள். அன்பர்கள் பலர் நன்றிக்கடனகளை அன்பளிப்புகளாலும் பாராட்டினர்.

## ஆங்கிலம் கட்டாயபாடம்

சர்வகலாசாலைகளில் படித்துவெளியேறும் மாணவர்கள் இனிமேல் ஆங்கிலத்தையும் கட்டாயபாடங்களில் ஒன்றாகஎடுத்துச் சித்தியடையவேண்டுமென்று உயர்கல்விச்சபை முடிவுசெய்திருக்கிறது. பட்டமபெற்று வெளியேறும் மாணவர்களுக்கு ஆங்கில அறிவு சிறப்பாக இருக்க வேண்டும்; ஆங்கிலகல்வியின் தரத்தை உயர்த்தவேண்டுமென்ற நோக்கத்துடனேயே சபை இந்தமுடிவைச் செய்யலாயிற்று. ஆங்கிலத்தை ஒருபாடமாகஎடுத்து அதிலே சித்தியடையாத மாணவர்களுக்குப் பட்டம்வழங்கப்படமாட்டாதென்றும் கருதப்படுகிறது.

ஆசிரியமணி

### பண்டிதர் வி. ஏ. யோண்பிள்ளை

அவர்கள்

இறைவனடிசேர்ந்த

## 2-ம் வருடம்

நிகழ்மதி 28-4-68 ஞாயிறுவாரம் பூர்த்தியாவதால் அதற்குமுன்தினம் சனிக்கிழமை காலை 6-30மணிக்குச் சூராவத்தை, அர்ச். சின்னத்தெரேசம்மாள் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அனைவரும் அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்கின்றோம்.

**புலம்பல்**

மறைந்தனை அன்பே! ஆண்டுகள் இரண்டு ஆனால்
மலர்வதனம் மதுரமொழி சிரிப்பின்தேக்கம் எந்தன்
நெஞ்சத்தை நீருக்க நிலைகுலைந்து நிற்கின்றேன்
மறுமுறையும் ஒருதடவை மதிமுகத்தைக் காண்பேனே.

— மனைவி ஆரோக்கியம்

பிள்ளையில்லாக் குறைதீர்க்க வளர்த்தீர்
பேரன்பைச் சொரிந்தீர் அணைத்தீர் பேணிக் காத்தீர்
உள்ளமெலாம் துடிதுடிக்கப் பிரிந்தீர்ஐயா
ஒடுகின்ற கண்ணீரைத் துடைக்க வாரீர்.

— மகள் கிறேஸ் அகஸ்ரின்

பிள்ளைக் கலிதீர்த்த பேரச் சிறுமணிகாள்
தெள்ளமுதத் திரவியங்காள் திங்கனிகாள் என்றெம்மை
அள்ளித்தூக்கி அணைத்துத் தாலாட்டிக்
கொள்ளை முத்தங்கொடுத்து வளர்த்தவரே
கோயில் எலாம் தேடுகின்றோம்.

— பேரர்: றெனி, பேட்டி, தர்ஷினி, சாந்தினி, கேசினி.

## மரணசங்கதி

ஊறணி, அர்ச். அந்தோனியார் ஆலய சக்கிறிஸ்தாமாகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு. ம. குருசுமுத்து அவர்கள் 11-4-68 பெரியவியாழக்கிழமை அதிகாலை அகால மரணமானார். இவரின் பூதவுடல் 12-4-68 பெரிய வெளளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் சொந்த இல்லத்தில் நடந்தேறிய மரணச் சடங்குகளின்பின்பு, ஊறணி சேமக்காலையில் உற்றார், உறவினர் புடைசூழ, நண்பர்கள்பலர் கூடியசமுகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரை இழந்து துயருறும் மனைவி, மக்கள், உறவினரோடு நாமும் அனுதாபப்படுகின்றோம்.

இவரின் ஆன்மா சாந்தியடைவதாக!

57-68 அன்பர்

### அன்டனி விஜயன் வீரசிங்கம்

அவர்களின்

## 25-ம் வருட மரணஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 24-3-1931 | 25-4-1943 |

எம்மைவிட்டுப்பிரிந்து ஆண்டுகள் 25 ஆகியும், எமது மனதைவிட்டு என்றும் அகலாத எனது சிரேஷ்ட புதல்வனும், எங்கள் அருமைச் சகோதரனுமாகிய அன்டனி விஜயசிங்கம் எங்களைவிட்டுப்பிரிந்து கால்நூற்றாண்டு பூர்த்தியாகின்ற இத்தருணத்தில் அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளவும்.

இரக்கமுள்ள யேசுவே! உமது அடியானாகிய அன்டனி விஜயன் வீரசிங்கத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும். அவர் என்றென்றும் சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
அன்னையும் சகோதரர்களும்.
உதயநிலை, ஊர்காவற்றுறை.

சங். சிஸ்றர் மேரி பெலிசிற்றுஸ்

அமரத்துவமடைந்த

## முதல்வருட ஞாபகம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1—12—1943 | 13—4—1967 |

நீர்கொழும்பு, பெரியாமுல்லை சதாசகாயமாதா ஆயத்தமடத்தின் கன்னியராய்க் கனிந்தமொழியும், மலர்ந்த முகமும, கருணைஉள்ளமும்பொருந்தி எம்குடும்பத்தின் மணிவிளக்காய் விளங்கிய எமது சிரேஷ்டபுத்திரி சுமார் ஈராண்டு காலமாய்த் தீராதநோயினால் சொல்லரிய வேதனைப்பட்டு எம்மை ஆறாத்துயரக் கடலுள்ஆழ்த்தி, சமாதான நித்திரையாய் இறைவனடிசேர்ந்த முதல்வருட நினைவுதினம் இம்மாதம் 13ஆம் தேதியாகும்.

இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், உறவினர், நேசர் யாவரும் அவவுடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
தந்தை, எஸ். எஸ். றொட்றீகோ, (ஆசிரி.)
தாய், டபிள்யு. எம். குரூஸ்

சகோதரர்:
சங். பிறதர் எஸ். விக்றர் இ. றொட்றீகோ, (குருமடம் அம்பிற்றியா)
எஸ். யோசெவ் நெவில் றொட்றீகோ

சகோதரிகள்:
எஸ். பெலிசிற்றுஸ் றொட்றீகோ (பாக்கியசீலி)
எஸ். கிறசென்சியா றொட்றீகோ
எஸ். பிறன்சிஸ்கா றொட்றீகோ

52|1, மேரியன்வீதி,
நீர்கொழும்பு. 56-68

ஆயுள்வேத வைத்தியர்

### அ. செபஸ்தியாம்பிள்ளை அவர்கள்

அமரத்துவமடைந்த

## 1-வது வருட ஞாபகம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 3—7—1896 | 1—5—1967 |

மண்ணில் மறைந்தாலும், எம் மனக்கண்ணில்நின்று என்றுமேநீங்காத எனது அருமைக் கணவரும், அருமைநாயகம், அனு றெஜீனா, பெனடிக்ரா, அக்கினேஸ், திரேசா சங். பிறதர் அன்ரன் மரியதாஸ் ஆகியோரது அன்புத் தந்தையுமாகியவர் இறைவனடிசேர்ந்த 1ஆம்வருடம் 1-5-68 இல் பூர்த்தியாகிறது. இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், பந்துமித்திரர், விசுவாசிகள் யாபேரும் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக பரி. கொஞ்சேஞ்சிமாதா தேவாலயத்தில் 2-5-68 வியாழக்கிழமை காலை 6-15மணிக்கு ஒரு துக்கப்பாடற்பூசை நிறைவேற்றப்படும்.

இவரை இழந்து துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரர்.

160, பெரியதெரு,
யாழ்ப்பாணம். 59-68

● காலஞ்சென்ற ஹைதராபாத் நிசாமின் அரண்மனைக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம், மின்சாரத்துக்கான பாக்கிப் பணம இன்னும் கட்டப்படாமையேயாகும். அவர் மின்சாரபில் சரியாகக் கட்டியதில்லையாம். அவர் மின்சாரத்துக்காகக் கட்டவேண்டிய பாக்கிப் பணம ஒருலட்சம்ரூபாவுக்கு மேலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்வியநற்கருணைச் சபையின் முதல் சுதேச குரவர்

கொழும்பிலே புறக்கோட்டையிலுள்ள சம்பிலிப்புநேரியார்கோவிலைத் தங்களது தலைமைஸ்தானமாகக் கொண்ட திவ்வியநற்கருணைக் குருமார்சபையின் பெருமைவாய்ந்த சரித்திரத்தில் 1968-ம் ஆண்டு சித்திரை 18 ஆம்திகதி வியாழக்கிழமை பொன்னட்சரங்களால் பொறிக்கப்படத் தகுந்த ஓர்புனிததினமாகும். ஏனெனில், அவர்கள் எமதுநாட்டில் முதன்முதலாகக் காலடிவைத்தபின கடந்துபோன பன்னிருவருடங்களிலும் ஆற்றியுள்ள அருந்தொண்டுகளின விளைவாக அவர்களின் சபையைச்சேர்ந்த இலங்கையரான முதல்சுதேசகுரவர் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றசுபதினம் அதுவாகும்.

திவ்வியநற்கருணைச்சபைக் குருமார் ஆஸ்திறேலியாவிலிருந்து 1956ஆம் ஆண்டு வைகாசிமாதம் முதன்முதலாக இலங்கைக்கு வந்தனர். அவர்கள் இங்குவந்து அதிகசனப்புழக்கமும, வியாபாரப்புழக்கமும் நிறைந்ததாய்க் கொழும்புநகரின் மத்தியிலுள்ள புறக்கோட்டைச் சம்பிலிப்புநேரியார் கோவிலைக் கையேற்ற சிலகாலத்துள் அக்கோவிலைச் சந்தித்து வழிபாடுநடத்தும் பக்தர்குழாங்களாலே அது பெரும் புழக்கம் எய்தலாயிற்று. அவர்களது அயராத பெருமுயற்சியால் இன்று சம்பிலிபபுநேரியார் கோவிலானது உலகில் தேவநற்கருணைப் பக்திக்கு அவர்களின் நூறுவது மத்தியதானமாக விளங்குகின்றது.

எமதுநாட்டிலே அவர்களது அப்போஸ்தலிக்கதொண்டின் முதற்பலனாக அவர்களுடைய சபையைச்சேர்ந்த இலங்கையரான முதல்சுதேசகுரவராக வண. அல்பிறெட் அலெக்சான்டர் S. S. S. பிறதர் திருகோணமலைத் துணைமேற்றிராணியாரான மகாவந். பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் அன்றுதினம் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றபோது, அங்கு சமூகமாயிருந்த சுமார்ஐம்பதுகுரவர்கள், பல்வேறு சபைகளைச்சேர்ந்த சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், புதிய குரவரின் சுற்றத்தவர், மற்றும்பக்தர்கள் மத்தியிலுண்டான பக்திப்பரவசகாட்சியாலே சம்பிலிப்புநேரியார் கோவில் இணையற்றமாட்சியுற்றிலங்கியது.

வண. அல்பிறெட் அலெக்சான்டர் சுவாமியார் யாழ்ப்பாணத்திலே அல்லைப்பிட்டியில் பிறந்தவர். அங்குள்ள பரிசுத்த உத்தரியமாதாகோவில் மூப்பரான திரு. வஸ்தியாம்பிள்ளை அல்பிறெட்—காலஞ்சென்ற ஆக்னேஸ் வஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் புதல்வர். இளவாலை, சென்ஹென்றீஸ், யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரிகளின் பழையமாணவர். இவர் 1960ஆம் ஆண்டு ஆஸ்திறேலியாவில் தமது நவசந்நியாசத்தை ஆரம்பித்துப் பின்பு அங்கே மெல்போன்நகரிலுள்ள கிறிஸ்துஇராசா குருமடத்தில் வேதசாஸ்திரம்பயின்று அண்மையிலே இலங்கைக்குத் திரும்பினர். இப்புதியகுரவர் ஆண்டவரின் திராட்சைத்தோட்டத்திலே நெடுங்காலம சித்திகரமாகத் திருத்தொண்டாற்றிவர இறைவன் திருவருள் புரிவாராக!

## பெற்றார் நாட்பெரு விழாவும், கலைவிழாவும்

மாம்புரி, அரசினர் சிரேஷ்டதமிழ் வித்தியாலயத்தின் பெற்றார்நாட்பெருவிழாவும், கலைவிழாவும் கடந்தவியாழக்கிழமை பிற்பகல 3மணிக்குத் தேசியக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. மாணவரின் அணிவகுப்பு மரியாதையும், மாணவிகளின் மேதகாப்பியாசக் காட்சிகளும் நடைபெற்றபின, பெற்றார்—ஆசிரியர் சங்கப்பொதுக் கூட்டம் கௌரவ உதவிநீதி அமைச்சரும், புத்தளத் தொகுதிப்பாராளுமன்ற அங்கத்தவருமான அல்ஹாஜ் எம். எச். எம். நெயினுமரைக்கார் தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் திரு. வீ எஸ். பிள்ளையவர்களின் நிர்வாக அறிக்கையும், பெற்றார் ஆசிரியர்சங்க அறிக்கையும் வாசித்துக்காட்டப்பட்ட பின்னர், தலைவர் தம்முரையில், "இப்பாடசாலைகளின் தேவைகளைப்பெற்றுத்தர முயல்வதாக வாக்களித்ததோடு, தலைமைஆசிரியரதும், பெற்றார் ஆசிரியர் சங்கத்தினதும் சிறந்த சேவைகளைப் பாராட்டியும் பேசினர். சிற்றுண்டியுபசாரணைகட்குப் பின், மாலை 6மணிக்குப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கலையரங்கில் மாணவரின் கதம்ப நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நடைபெற்றன. தொடர்ந்து "கலைச்சிற்பி" அவர்களின் தயாரிப்பான "மனமாற்றம்" என்ற சமூகசீர்திருத்த நாடகம் இளைஞர் தமிழ்இலக்கிய மன்ற நடிகர்களால் வெகுவிமரிசையாக நடித்துக் காட்டப்பட்டது. ஈற்றில், ஆசிரியர் திரு. எஸ். அந்தோனியவர்களின் நன்றியுரையுடன் தேசியகீதம் பாடப்பட்டதும விழாமுடிவாகியது.

## தொழிலாளர் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்று தொழிலாளர்களின் விண்ணுலகப் பாதுகாவலர் அர்ச். சூசையப்பர் என்று பரிசுத்ததந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் பிரகடனம்செய்தார். 13-ம் சிங்கராய பாப்பிறை பாட்டாளிகளின் எடுத்துக்காட்டு என்று அர்ச். சூசையப்பரைக் குறிப்பிட்டார். ஆதிக்க வெறிபடைத்த நாத்திகப் பேயின் பொய்ப்பிரசாரத்தைச் சிதைக்கும் சம்மட்டியாக ஆம், காப்பாளராக ஏழைத் தச்சனுகிய சூசைமாமுனிவனையே 11-ம் பத்திநாதர் பாப்பரசர் உலகுக்களித்தார். அதைத்தொடர்ந்து 1955-ம் ஆண்டு வைகாசித்திங்கள் முதலாம்நாள் வத்திக்கான் முன்றிலிலே 5 இலட்சம் மக்கள் மத்தியிலே கரகோஷத்தின் இடையிலே மாபெரும் சனசமுத்திரம்போல் குழுமியிருந்த மகாசந்தர்ப்பத்திலே மேதினமானது தொழிலாளியான அர்ச். சூசையப்பர் தினமென்று 12-ம் பத்திநாத பாப்பாசர் பிரகடனம் செய்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் உற்பத்தியைப் பெருக்குவதில் எல்லோரும் ஒன்றித்துப் பாடுபடவேண்டும். இந்த ஒருமைப்பாட்டை உருவிக்கும் ஒரேயொரு புளிக்காரம் சுவிசேஷ மனப்பான்மையே. இந்த மனப்பான்மை உந்நதமாக நிரம்பியிருந்தவர் அர்ச். சூசையப்பரே என்று அறிவுறுத்தினர்.

இன்னும் அவர் புகழுக்கு அத்தாட்சிவேண்டுமா? ஆம் நமது காலஞ்சென்ற பாப்பிறை 23-ம் அருளப்பர் என்ன செய்தார். 2-ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பாதுகாவலராக அர்ச். சூசையப்பரை நியமித்துப் பிரகடனம்செய்தார். அதைத் தொடர்ந்து அவர் விடுத்த நிருபத்தில் திருச்சபையின் பொதுச் சங்கம் ஒன்றை ஆயத்தம் செய்வதற்கும், நடத்துவதற்கும் அவசியம் ஒரு பலத்தைப் பெற்றுத்தரக்கூடிய பரலோக பாதுகாவலர் ஒருவரை நாம் தேடினல் திருக்குடும்பத் தலைவரும், திருச்சபையின் பாதுகாவலருமான அர்ச். சூசையப்பரைப்பார்க்கக் கூடிய பொருத்தமுள்ள வேறு ஒருவரை நாம் பரலோகவாசருள் காணமுடியாது எனக்குறிப்பிட்டார். அது மட்டுமா பூசைப்பலியின் முக்கியபகுதியில் அர்ச். சூசையப்பரின் நாமம் இடம் பெறல்வேண்டுமெனவும் அருளப்ப அண்ணல் கட்டளையிட்டார். இத்துணை வல்லபமுடைத்தான நீதிமானின் தினத்தைக் கொண்டாடுவதில் பெருமிதமடைகின்ரேம். எனவே, இச்சந்தர்ப்பத்திலே எங்கள் தொழில்துறைகளையும், குடும்பங்களையும் அவர் பாதத்தில் ஒப்புக்கொடுத்து நமக்கு உதவியாக வறுமையைச்சிநேகித்த தாதையை, பொறுமையின் கண்ணுடியை, திருக்குடும்பப்பாதுகாவலரை, கிறிஸ்தவ தொழிலாளரின் மாதிரிகையை இரந்து வேண்டுவோமாக!

## பெற்றேல் ஆராய்ச்சி

தொண்டமானுறு, கீரிமலைப்பகுதிகளில் பெற்றேலஎண்ணெய் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டிருப்பதாக இங்கு பெற்றேல்ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிபுணர்ஒருவர் தெரிவித்திருக்கின்றார். தொண்டமானுற்றுப்பகுதியில் பெற்றேல்எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டால் அது குழாய்கள்மூலம கீரிமலையிலுள்ள சேந்தான்குளப்பகுதிக்கு எடுத்துச்செல்லப்படுமென்றும, அங்கே எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம்ஒன்று அமைக்கப்படுமென்றும் அவா தெரிவித்திருக்கிறார். மன்னாரிலும், தீவுப்பகுதியிலும் தற்போது நடைபெற்றுவரும் எண்ணெய்ஆராய்ச்சி பயனளித்து வருகிறதென்றும், 12,000 அடி ஆழத்தில் எண்ணெய்ஊற்றுகள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதென்றும் அவர் கூறியிருக்கின்றார்.

## தேக்கமரமும் மன்னாரும்

மன்னார்ப்பகுதியிலே தேக்கமரங்களை நட்டுவளர்ப்பதுபற்றிய ஆலோசனை நடைபெறுகிறது. இதற்கென அங்கே நூறுஏக்கர்நிலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. மடுறோட்டுப் பகுதியைச் சேர்ந்த காடுகள் தேக்கமரங்கள் உண்டுபண்ணுவதற்கு உகந்தஇடமென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது

## வில்வமடுப் புதியமுகாம்

புதிதாகத் தொடக்கப்பட்டுள்ள விசுவமடு விவசாயப்படை முகாமுக்குச் சென்றவியாழக்கிழமைமுதல் 250 வாலிபர்கள் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பருத்தித்துறை, உடுப்பிட்டி, காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சிமுதலாம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

## உயிர்த்தெழுந்த திருநாட் பஜனை

நம்திருமீட்பரின் உத்தான ஞாயிறன்று கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தினரால் நடத்தப்படும் உயிர்த்தெழுந்த திருநாட்பஜனை இம்முறையும் அத்திருநாளாகிய சென்ற 14 ஆமதிகதி ஞாயிறுவாரம் மாலை 6-30மணிக்கு யாழ்ப்பாண மத்தியகல்லூரி மைதானத்திலே பக்திமணம்கமழ ஞானப்பரிமளிப்பாக நடந்தேறியது. அங்கு நிறுவப்பட்டிருந்த பீடத்தின்மீது திருச்சிலுவை அலங்கார தீபங்களிடையே கண்ணுற்றாரையெல்லாம் ஈர்த்து பொன்னெளி வீசிக்கொண்டிருக்க அதனைச்சூழ்ந்து பாடகர்குழாம் வாத்தியவரிசைகளுடன் வெண்ணுடைகள்தரித்து அமர்ந்திருக்க, முற்புறமுழுவதும் மின்சார தீபங்களால் பகலைப்போன்று பிரகாசிக்க, செபத்துடன் பஜனைஆரம்பமாயிற்று. அதிலே "தேவாதிதேவன் இன்றுயிர்த்தான் — தேவாதி தேவன்றன் நேய குமாரன்—சீவரட்சணிய—உபகாரன இயேசு..."—"பாடவாரும் சேர்ந்து பாடவாரும் — இயேசு—உயிர்த்தெழுந்தார் துதி பாடவாரும் ......" இயேசு உயிர்த்தெழுந்தார்—பயம் தரும சாவை ஜெயித்தார்..." என்பனவாக அத்தருணம் செவிகுளிர, சிந்தைகுளிரப் பாடப்பெற்ற இன்பகரமான கானங்கள்பலவும் கர்ணாமிர்தம் போன்று ஆங்கு சமயபேதமின்றிச் சமூகமளித்திருந்த மக்களிடையே பெரிதும் ஞானமனேற்சாகத்தைப் பிறப்பித்து அனைவரையும் பேரின்ப உணர்ச்சிவெள்ளத்தில் ஆழ்த்தியது. பாக்களிடையே வாசிக்கப்பெற்ற வேத வாசிப்புகள் இசைப் பொருத்தத்திற்கேற்ற இடப்பொருத்த முடையனவாயிருந்தன. கிறிஸ்த சேவ ஆச்சிரமம் நடாத்திய இந்தப் பக்தியருட்சிக்குரிய பஜனை உயிர்த்தெழுந்த திருநாளன்று மக்களுக்குஅளித்த ஓர் இன்னிசை விருந்தாயிற்று எனலாம்.






இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ஞு சித்திரைமீ 27-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org